திதி/ புனித மரியாள் கல்லூரி (தேசிய பாடசாலை)
திருகோணமலை.
புவியியல்
மூன்றாம் தவணைப் பரீட்சை 2022

| தரம்: 9 | சுட்டெண்: ........................................................................ | நேரம்:2 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பகுதி I

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

**01 - 05 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக**

01. ஆசியா கண்டம் தென் அகலக்கோடு $10^0$ தொடக்கம் வட அகலக்கோடு .............................. வரை பரந்துள்ளது.
( $70^0$ , $80^0$ , $90^0$ )

02. யூரல் நதி ..................................... கடலை சென்றடையும்.
( ஏரல், செங்கடல், கஸ்பியன் )

03. இடைநிலைச் சமவெளியில் அமைந்துள்ள சமாந்தர மலைத் தொடராக............................................... மலைத்தொடர் காணப்படுகிறது.
( ரகவ் ஆன, நமுனுகல, சிவனொலிபாத மலை )

04. புதுபிக்கக் கூடிய சக்தி வளமொன்றிற்கான உதாரணமாக அமைவது ...........................................
( நீர்மின்சாரம், அனல் மின்சாரம், சூரிய சக்தி )

05. டுபாய் நாட்டின் பொருளாதாரத்தின் அடிப்படையாக அமைவது .......................................... உற்பததியாகும்.
( மின்சார உபகரணம், கனிய நெய், பிளாஸ்டிக் )

**06 - 10 வரையான கூற்றுக்கள் சரியாயின் (√)எனவும், பிழையாயின் (X) எனவும் அடைப்பினுள் அடையாளமிடுக.**

06. தென் ஆசிய நாடுகளில் எழுத்தறிவு வீதம் அதிகமுள்ள நாடாக இலங்கை காணப்படுகின்றது. ( )

07. பாகிஸ்தான் உலகில் பரந்த நீர்ப்பாசனத் தொகுதியுடைய பிரதான நாடாகும். ( )

08. ஓசோன் படையைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் மொன்றியல் சமவாயம் ஆரம்பிக்கப்பட்டது. ( )

09. குறிப்பிட்டதொரு பிரதேசத்தின் வளிகடீ காலத்தில் குறுகிய காலததில் ஏற்படும் மாற்றம் காலநிலையாகும். ( )

10. இலங்கையின் பௌதீக நிலத்தோற்றமானது மனிதனின் செயற்பாடுகளில் செல்வாக்கு செலுத்துகின்றது. ( )

**11 - 15 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.**

11. 1:50000 இட விளக்கப்படங்களில் தரைதோற்ற அம்சங்களை ............................... மூலம் இனங்காணலாம்
(i) முறிகோடு (ii) சமவுயரக் கோடு (iii) சமஆழக்கோடு (iv) கருநிறக்கோடு

12. மாவட்ட அடிப்படையில் மாதாந்த தலா வருமானம் உயர்வாக உள்ள மாவட்டம்
(i) கம்பஹா (ii) குருநாகல் (iii) கொழும்பு (iv) கண்டி

13. இலங்கையில் காணக்கூடிய கண்டல் தாவர பிரதேசம் அல்லாதது
(i) கலமெட்டியாவ (ii) சுந்தர்பான் (iii) ஆனவிழுந்தான் (iv) முந்தல்

14. நிலத்தை நோக்கி உள்வளைந்த அகன்ற கடல் பகுதி அழைக்கப்படுவது
(i) களப்பு (ii) தீவு (iii) குடா (iv) முனை

15. யப்பானில் கணினி மற்றும் கணினி உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்யும் நிறுவனமாவது
(i) பெனசோனிக் (ii) நிகோன் (iii) புஜிடசு (iv) சிகோ

**16 - 20 வரையான பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

16. இலங்கையில் அதிகமான கைத்தொழில்கள் அமைந்திருப்பது .................................. மாகாணத்திலாகும்.

17. இலங்கையின் மொத்த வடிகால் பாங்கு ................................... வடிகால் பாங்காகும்.

18. ஐரோப்பாவும் ஆசியாவும் ஒன்றாக சேர்ந்து ஒரே நிலத்திணிவாக அமைந்திருப்பதால் அது ................................ என அழைக்கப்படும்.

19. சுழல்காற்று அமுகக் இறக்கங்கள் அல்லது புயல்கள் என அழைக்கப்படுவது ............................................ மழையாகும்.


20. சூழலில் ஏற்படும்மாற்றங்களுக்கு எதிர்தாக்கம் புரிந்து சூழலியல் பண்புகளைப் பாதுகாத்து பேணுவது ......................... எனப்படும்.

(2 x 20 = 40 புள்ளிகள்)

## பகுதி- II

### எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01) (அ) கீழே காட்டப்பட்டுள்ள ஆசியாப் படத்தை பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.




(i) படத்தில் யு இனால் காடட்ப்பட்டுள்ள மலைத்தொரை பெயரிடுக.

(ii) B எழுத்தால் காட்டப்பட்டுள்ள மேட்டு நிலத்தைப் பெயரிடுக.

(iii) C எழுத்தால் காட்டப்பட்டுள்ள நதியைப் பெயரிடுக.


(iv) D எழுத்தால் காட்டப்பட்டுள்ள தீவைப் பெயரிடுக.

(v) தென் சீனக் கடல் எவ்வெழுத்தால் காட்டப்பட்டுள்ளது.

(vi) மலாக்கா தொடுகடல் எவ்வெழுத்தால் காட்டப்பட்டுள்ளது.

(6 புள்ளிகள்)

(ஆ) தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தை பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.




(i) A எழுத்தால் காட்டப்பட்டுள்ள முனையை பெயரிடுக.

(ii) B எழுத்தால் காட்டப்பட்டுள்ள களப்பை பெயரிடுக .

(iii) C எழுத்தால் காட்டப்படும் எச்சக்குன்று எது?


(iv) சிலாபம் களப்பை காட்டும் எழுத்து எது?

(v) மன்னார் தீவை காட்டும் எழுத்து எது?

(vi) படத்தில் நிறந்தீட்டப்பட்டுள்ள பிரதேசத்தில் பரந்துள்ள தாவரப்போர்வை எது?

(6 புள்ளிகள்)

(இ) கீழே தரப்பட்டுள்ள படத்தைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.




1. A - B கோட்டால் காட்டப்படும் அம்சம் யாது?
2. C - D கோட்டால் காட்டப்படும் அம்சம் யாது?
3. E - F கோட்டால் காட்டப்படும் அம்சம் யாது?
4. G - H கோட்டால் காட்டப்படும் அம்சம் யாது?

(4 புள்ளிகள்)

02. (i) பின்வரும் கடல்களுக்கு/ சமுத்திரங்களுக்கு சென்றடையும் ஆசிய வலயத்திலுள்ள நதிகள் இவ்விரண்டை எழுதுக.

| சமுத்திரம் | கலக்கும் நதி | |
|---|---|---|
| (1) ஆட்டிக்சமுத்திரம் | 1 .................................. | 2 .................................. |
| (2) இந்து சமுத்திரம் | 3 .................................. | 4 .................................. |
| (3) பசுபிக் சமுத்திரம் | 5 .................................. | 6 .................................. |

(ii) பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

( மொங்கோலியா, இந்தியா, பமீஸ், சீனா, எவரெஸ்ட், பைக்கால், கோபி, திபெத், தார் )

(a) குறைந்த மழைவீழ்ச்சியை பெறும் பாலைவனம் ..................................................

(b) அதிக உயரத்தில் அமைந்துள்ள மேட்டுநிலம் ..................................................


(c) தென் ஆசியாவில் அதிக சனத்தொகை வாழும் நாடு ..................................................

(d) மிக ஆழமான ஏரி ..................................................

(e) உலகில் மிக உயர்ந்த மலைச்சிகரம் ..................................................

(11 புள்ளிகள்)

03. (i) கீழே குறிப்பிடப்படும் மழைவீழ்ச்சிகளை இலங்கை பெற்றுக் கொள்ளும் காலங்களை குறிப்பிடுக.
(அ) தென்மேல் பருவக்காற்று
(ஆ) சூறாவளி




(ii) இலங்கையின் வெப்பநிலை பரம்பல் மாறுபடுவதற்கான காரணங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(iii) இலங்கையின் காலநிலை வலயங்கள் படத்தில் A, B எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ளது. அவற்றை பெயரிடுக.

(a) C காலநிலை காணக்கூடிய பிரதேசத்தை பெயரிடுக.

(b) D மற்றும் E இனால் காட்டப்படும் காலநிலை வலையங்களில் பரந்திருக்கும் தாவர வகைகளை முறையாகக் குறிப்பிட்டு அதில் காணக்கூடிய விஷேட பண்புகள் ஒவ்வொன்றை எழுதுக.

(11 புள்ளிகள்)

04. (i) அபிவிருத்தியை அளவிட பயன்படும் குறிகாட்டிகள் இரண்டைக் குறிப்பிடுக.

(ii) இலங்கையின் நிலப்பரப்பில் 3/4 பகுதி வறணட் வலயத்திற்குறியதாகும். எனினும் வறணட் வலயத்தின் அபிவிருத்தி குறைவடைவதற்குறிய காரணங்கள் மூன்றை எழுதுக.

(iii) (a) பின்வரும் படத்தில் குடியிருப்புக்களின் பிரதான பிரிவுகள் A, B, C எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ளன. அதனை முறையாகப் பெயரிடுக.

A



B



C



(b) மேலுள்ள குடியிருப்புக்கள் மூன்றினதும் விஷேட இலட்சணங்கள் ஒவ்வொன்றைக் குறிப்பிடுக.

(11 புள்ளிகள்)

05. (i) கரையோரப் பிரதேசங்களின் நிலத்தோற்றங்கள் காணப்படுகின்றன. பின்வரும் நிலத்தோற்றங்கள் என்ன என்பதை விளக்குக.

1. முனை 2. தீவு

(ii) 1: 50000 இடவிளக்கப்படங்களில் பயன்படுத்தப்படும் குறியீடுகள் காட்டப்பட்டுள்ளன. அவற்றை இனங்கண்டு பெயரிடுக.



(iii) இட விளகக் படங்களில் காட்டப்படும் அமசங்கள் சில கீழே தரப்பட்டுள்ளது. அவை சரியா, பிழையா என விடைப்பத்திரத்தில் எழுதுக.

1. நிர்வாக எல்லைகளை அவதானிக்கும் போது அவை ஆறுகள், மலைத்தொடர்கள் போன்ற பௌதீக அமசங்களின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டுள்ளன.

2. விவசாய நிலஙக் ளின் பயன்பாடானது அதிகமாக தரைத்தோற்றம் மற்றும் நீர்வடிகாலமைப்பு வசதிக்கேற்பவே தீர்மானிக்கப்படும்

3. சமவெளிப் பிரதேசங்களை விட மலைப்பிரதேசங்களில் சனத்தொகை செறிவாக காணப்படும்.

4. மலைப்பிரதேசங்களில் தேயிலையும் மத்திய உயரமுள்ள பிரதேசங்களில் நெற்செய்கையும், கரையோரப் பிரதேசத்தில் தென்னை பயிர்ச்செய்கையும் இடம்பெறுகின்றது.

5. சமவெளிப் பிரதேசங்களில் வீதி வலையமைப்புகள் நேராகவும் மலைப் பிரதேசங்களில் தரைத்தோற்ற அமைப்புகக் ஏற்ப வீதிகள் வளைந்தும் செல்கின்றன.

(11 புள்ளிகள்)